மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் கோவில்பட்டி

முன்னிலை –திரு.வே.முரளிதரன்,பி.பி.ஏ,பி.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

2021–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13–ஆம் நாள் வெள்ளிகிழமை

அசல் வழக்கு எண்.17/2021.

CNR.No.TNTT06000018–2021.

––––

தூத்துக்குடி மாவட்டம்,கோவில்பட்டி வட்டம், கழுகுமலை டவுண்,முத்தையன் தெரு எண்.1 ல் வசிக்கம் சங்கலிங்கம் குமாரர் சுமார் 40 வயதுள்ள குருநாதன்

...வாதி.

–எதிர்–

1.தூத்துக்குடி மாவட்டம்,கோவில்பட்டி வட்டம்,கழுகுமலை டவுண்,டிப்போ தெருவில் கதவு எண்.7 ல் வசிக்கும் ஆவுடையப்ப முதலியார் குமாரர் சுமார் 55 வயதுள்ள தங்கராஜ்

2.தூத்துக்குடி மாவட்டம்,கோவில்பட்டி வட்டம்,கழுகுமலை டவுண்,டிப்போ தெருவில் கதவு எண்.7 ல் வசிக்கும் தங்கராஜ் குமாரர் சுமார் 27 வயதுள்ள சுரேஷ்

3.தூத்துக்குடி மாவட்டம்,கோவில்பட்டி வட்டம்,கழுகுமலை டவுண்,டிப்போ தெருவில் கதவு எண்.7 ல் வசிக்கும் தங்கராஜ் குமாரர் சுமார் 25 வயதுள்ள அரவிந்.

...பிரதிவாதிகள்.

வாதி தபசில் சொத்தில் கடை நடத்தி வருவதை பிரதிவாதிகள் சட்டத்திற்கு புறம்பான முறையில் எவ்வகையிலும் இடையூறு செய்யவோ காலி செய்யவோ கூடாதென்று பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பிறப்பித்தும் உத்தரவிட்டும், இந்த வழக்கின் செலவுத்தொகை வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கும் படிக்கும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கல் நாள் – 22.01.2021.

வழக்கு மூலம் –1999 ஜுன் மாதம் முதலும், 05.11.2017 ம் முதலும், 10.12.2018 முதலும் 29.12.2018 முதலும், 30.12.2018 முதலும்,27.12.2020 முதலும், கோவில்பட்டி தாலுகா,கழுகுமலையில் வைத்து தாவா உற்பத்தி.

அதிகார வரம்பு –ரூ.1000/–

நீதிமன்ற முத்திரைக்கட்டணம் –தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக்கட்டணச்சட்டப் பிரிவு 27(சி)ன்படி ரூ.30/– செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கு இன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.விஜயபாஸ்கரன், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகமலும், பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாமலும், தோன்றா தரப்பினராக்கப்பட்டும், பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜரில்லாத நிலையில் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு வாதங்களை கேட்டும், சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இவ்வழக்கில்

வழங்கும்,

<u>தீர்ப்பாணை</u>

1.வாதி தபசில் சொத்தில் கடை நடத்தி வருவதை பிரதிவாதிகள் சட்டத்திற்கு புறம்பான முறையில் எவ்வகையிலும் இடையூறு செய்யவோ காலி செய்யவோ கூடாதென பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுஇதன் மூலம் தீர்ப்பளிக்கப்படுகிறது.

2.செலவுத்தொகை இல்லை.

<u>தபசில் சொதது விபரம்</u>

துாத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், கழுகுமலை கீழரதவீதியில் அமைந்துள்ள கடைக்கு நான்கு மால்.

வடக்கு – அருணாசலம் என்பவரது பழக்கடை

கிழக்கு – கழுகுமலை கழுகாசலமூர்த்தி திருக்கோவிலுக்கு பாத்தியப்பட்ட கட்டிடம்.

தெற்கு – குமரன் ஜவுளிக்கடை

மேற்கு – கீழரதவீதி.

2021–ஆம்ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13–ஆம் நாள் என்னுடைய கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

(ஒப்பம்)வே.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.